# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம்.

முன்னிலை:– **திரு.ஜோ.ஜெய்கணேஷ், பி.டெக்.,பி.எல்.,**
நீதித்துறை நடுவர் (FAC), குடியாத்தம்.

2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை

## ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 156/2023
## (C.N.R. No.TNVL11-004351-2022)

<table>
<tr><td>குற்றமுறையீட்டாளர்</td><td>–</td><td>மாநில அரசு, காவல் உதவி ஆய்வாளர் மூலமாக<br>பரதராமி காவல் நிலையம்,<br>குற்ற எண். 192/2021</td></tr>
<tr><td>குற்றம்சாட்டப்பட்டவர்</td><td>–</td><td>தனபால், வயது 69, த/பெ.பெரியசாமி</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றங்கள்</td><td>–</td><td>U/s. 294(b), 506(ii), 325 IPC</td></tr>
<tr><td>குற்ற நிகழ்வு நாள்</td><td>–</td><td>15.10.2021</td></tr>
<tr><td>தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>–</td><td>16.10.2021</td></tr>
<tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>–</td><td>17.10.2021</td></tr>
<tr><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>–</td><td>09.11.2021</td></tr>
<tr><td>வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>–</td><td>06.09.2022</td></tr>
<tr><td>குவிமுச பிரிவு 240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>24.11.2023</td></tr>
<tr><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>–</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</th><th>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>03.09.2024</td><td>03.09.2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>03.09.2024</td><td>03.09.2024</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>11.11.2024</td><td>11.11.2024</td></tr>
</table>
</td></tr>
<tr><td>குவிமுச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்</td><td>–</td><td>––</td></tr>
<tr><td>குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>13.11.2024</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விவரம்</td><td>–</td><td>––––</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| தீர்மானம் | – | எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 06.09.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.M.ரவி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக 13.11.2024 ஆம் தேதி என் முன்பாக விசாரணைக்கு வந்ததில், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், வாதி குமாரசாமி, த/பெ.கந்தசாமி என்பவருக்கும், அவரது உறவினரான எதிரி தனபால், த/பெ.பெரியசாமி என்பவருக்கும் நிலத்திற்கு செல்லும் பொதுவழி சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் 15.10.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி வழியில் வாதி சென்றதாகவும், இதனால் எதிரி தனபால் வாதியின் வீட்டினிடம் சென்று ங்கோத்தா, தேவிடியா பையா ஏன்டா இந்த வழியில் வருகிறாய் என்று அசிங்கமாக திட்டியும், அதற்கு வாதி பொதுவான வழியில் தானே வந்தேன் என்று கேட்டதற்கு எதிரியானவர் அவர் வைத்திருந்த மரக்கொம்பால் வாதியை தாடையின் மீதும், மார்பு மற்றும் வயிற்றின் மீதும் சரமாரியாக அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், மேலும் என்னிடம் பிரச்சனை செய்தால் உன்னை கொலை

செய்துவிடுவேன் என்று மரக்கொம்பை காட்டி மிரட்டியதாகவும், எனவே எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 325, 506(2)–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பரதராமி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னிட்டு இவ்வழக்கானது நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச.207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்களின் சாராம்சத்தை விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து கூறினார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

3. அரசுத்தரப்பில் மொத்தம் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன. வழக்கு சொத்து சா.பொ.1 குறியிடப்பட்டன.

4. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சங்கதிகளை

கொண்டு குற்றஞ்சாட்டப்பட்ட நபரிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் அத்தகையை சாட்சிய சூழ்நிலைகளை பொய் என மறுத்தார். குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணம் ஏதும் குறியிடப்படவில்லை.

5. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களில் இருந்தும், இருதரப்பு வாதங்களில் இருந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீதான குற்றச்சாட்டு தகுநிலை சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

6. இவ்வழக்கின் புகார்தாரரும், வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபருமாக இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அ.சா.1 குமாரசாமி தன்னுடைய சாட்சியத்தில், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

7. அதுபோலவே வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக இறுதி பட்டியலில் காட்டப்பட்டுள்ள அ.சா.2 ஜெகதீசன் தனது சாட்சியத்தில், தனக்கு வழக்கை பற்றி எதுவும் என்றும்,

இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

8. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியமானது எதிரிகளை இவ்வழக்கு சம்பவத்துடன் இணைப்பதாக இல்லை. எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியத்தின் மூலம் எதிரி குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.2 பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால், பட்டியல் சாட்சி 3 முதல் 7 ஆகியோர் சாட்சியம் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்குமாறு அரசு தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அவர்கள் சாட்சியமளிப்பதிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

10. அ.சா.3 விநாயகம் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது பரதராமி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2021 ஆம் வருடம் மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திருமதி.அஜந்தா என்பவர் பணிசெய்த விவரம் தனக்கு தெரியும் என்றும், அவர் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டபடியாலும், அவரது கையெழுத்து எனக்கு பரிட்சியம் என்பதாலும் அவர் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 16.10.2021 தேதி மாலை 03.00 மணிக்கு மேற்படி உதவி ஆய்வாளர் அஜந்தா நிலைய பொறுப்பில் இருந்தபோது

குமாரசாமி, த/பெ.கந்தசாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 192/2021 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார் என்றும், அன்றைய தினமே மாலை 04.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் அசோக் மற்றும் நடராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார் என்றும், பிறகு அதே சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து 3 அடி நீளமுள்ள மரக்கொம்பு ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார் என்றும், பின்னர் சாட்சிகள் குமாரசாமி, ஜெகதீசன், சரஸ்வதி, பாலமூர்த்தி, அசோக் மற்றும் நடராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் மறுநாள் காலை 11.30 மணிக்கு அக்ரவாரம் பஸ் நிறுத்ததிடம் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார் என்றும், அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவரிடம் இருந்து காயசான்றிதழ்

பெற்றார் என்றும், கைப்பற்றபட்ட உடைந்த நிலையில் உள்ள பாட்டில் படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார் என்றும், பின்னர் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரே பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையில் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சம்பவங்களை விவரிப்பதாக அமைந்துள்ள அ.சா.3–ன் மேற்படி சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதிரி தான் குற்றவாளி என தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேற்கண்ட தீர்ப்பு விவாதத்தின் அடிப்படையில் எதிரி தான் அ.சா.1ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அடித்து, கொலை மிரட்டல் செய்தார் என்று அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. முடிவில், எதிரி மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதால், எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 325, 506(2)–ன் படியான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்த தீர்ப்பானது கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் பதிவு செய்யப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த

பிணைப்பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

14. இவ்வழக்கில் C.P.No.140/2022–ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள சுமார் 3 அடி நீளமுள்ள மரக்கொம்பு ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/– ஜோ.ஜெய்கணேஷ்,**
குற்றவியல் நீதித்துறை நடுவர் (FAC),
குடியாத்தம்.

**<u>இணைப்புகள் :–</u>**

**1. <u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. குமாரசாமி |
| அ.சா.2 | திரு. ஜெகதீசன் |
| அ.சா.3 | திரு. விநாயகம் |

**2. <u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.7 | காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | படிவம் – 91 |

<u>3. அரசுத் தரப்பு சான்றுபொருள்:</u> – C.P.No. 140/2022

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 3 அடி நீளமுள்ள மரக்கொம்பு |

**4. எதிரி தரப்பில் சாட்சிகள்,**
**சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்** – இல்லை

**ஓம்/– ஜோ.ஜெய்கணேஷ்,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
குடியாத்தம்.

<u>குறிப்பு</u>

1) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.
3) சாட்சிகள் எவரும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

<u>நகல்</u>

மாண்புமிகு, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.